

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.6.2025) சென்னை மாநகரில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 6.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 50 கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கிவைக்கும் விதமாக, சென்னை, மெரினா கடற்கரை நீச்சல் குளம் அருகில் அமைக்கப்பட்டுள்ள கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரத்தை தொடங்கி வைத்து, குடிநீர் அருந்தினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (18.6.2025) தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, வணிகவரி மற்றும் பதிவுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திருமதி காகர்லா உஷா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், வணிகவரி ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், பதிவுத்துறை தலைவர் தினேஷ் ஆலிவர் பொன்ராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பால சாகித்ய புரஸ்கார் - யுவ புரஸ்கார் விருதுகளுக்குத் தேர்வாகியுள்ள

# எழுத்தாளர்கள் சரவணன் - லட்சுமிஹருக்கு வாழ்த்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை. ஜூன்.19-

**பால சாகித்ய புரஸ்கார் விருதிற்கு தேர்வாகியுள்ள எழுத்தாளர் சரவணன் மற்றும் யுவ புரஸ்கார் விருதிற்கு தேர்வாகியுள்ள எழுத்தாளர் லட்சுமிஹர் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-**

சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் குழந்தைகளுக்கு வலியுறுத்தும் 'ஒற்றைச் சிறகு ஓவியா' நூலுக்காக சாகித்ய அகாதமியின் பால சாகித்ய புரஸ்கார் பெறத் தேர்வாகியிருக்கும் எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன் அவர்களுக்கு எனது மனம்நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊஞ்சல், தேன்சிட்டு, கனவு ஆசிரியர் என தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறையின் முன்னெடுப்புகளிலும் திறம்படப் பங்காற்றி வரும் விஷ்ணுபுரம் சரவணன் அவர்கள் இந்த விருதுக்குத் தேர்வாகி இருப்பது கூடுதல் பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கிறது.

அதேபோல, ஆழமான தம் எழுத்துகளுக்கான அங்கீகாரமாகக் 'கூத்தொன்று கூடிற்று & பிற கதைகள்' சிறுகதைத் தொகுப்புக்காக யுவ புரஸ்கார் பெறத் தேர்வாகி இருக்கும் லட்சுமிஹர் அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருது பெறும் இரு இளம் படைப்பாளர்களும் மென்மேலும் தமிழைச் செழுமைப்படுத்தும் ஆக்கங்களை தொடர்ந்து அளிக்க வேண்டும் என வாசிப்பினை பெரும் இயக்கமாக முன்னெடுத்து வரும் நமது திராவிட மாடல் அரசின் சார்பில் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று (18.06.2025) புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், டெல்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில், சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ஒருமுறை நிதியுதவியாக தலா 8 ஆயிரம் ரூபாய் மற்றும் அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், மசாலாப் பொருட்கள் அடங்கிய 4 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் தொகுப்பினை வழங்கினார். உடன் தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் முனைவர் மா. வள்ளலார், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் அஷிஷ் குமார் ஆகியோர் உள்ளனர்.

ஜூலை 14 - அன்று நடைபெறும்

# திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி குடமுழுக்குப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

மதுரை, ஜூன்.19-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (18.06.2025) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் வருகின்ற ஜூலை மாதம் 14 அன்று நடைபெறவுள்ள குடமுழுக்கு பெருவிழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

அறுபடை வீடுகளில் முதல் வீடாக திகழும் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசாமி திருக்கோயிலுக்கு சுமார் இரண்டரை கோடி ரூபாய்க்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 14 ஆண்டுகளுக்கு பிறகு வருகின்ற ஜூலை மாதம் 14 அன்று காலை 6 மணியிலிருந்து 7 மணிக்குள்ளாக குடமுழுக்கு நடைபெற உள்ளதை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்தும், இத்திருக்கோயிலின் குடமுழுக்கிற்கு ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்தாலும் அனைவரும் குடமுழுக்கை பார்க்கின்ற வகையில் சுற்றிலும் திருக்கோயிலை சுற்றிலும் எல்இடி அமைத்தல், பக்தர்களுக்கு தேவையான உணவு, குடிநீர், கழிப்பிட வசதி மற்றும் மருத்துவ வசதி போன்றவற்றை ஏற்படுத்துதல், பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்றவை குறித்தும் ஆய்வு மேற்கொண்டோம். அந்த வகையில் திருப்பரங்குன்றம் திருக்கோயில் குடமுழுக்கு சீரோடும் சிறப்போடும் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரையில் 3,117 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடந்திருக்கின்றன. அதில் 117 திருக்கோயில்கள் முருகன் திருக்கோயில்களாகும். பெருந்திட்ட வரைவு (மாஸ்டர் பிளான்) என்ற சொல் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் கொண்டுவரப்பட்டு வரலாறு காணாத அளவிற்கு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 400 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஜூலை மாதம் 7 அன்று குடமுழுக்கு நடைபெற இருக்கின்றது. அதற்கான பணிகளையும் தொடர்ந்து ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். இந்த குடமுழுக்கினை பிச்சை குருக்கள், ராஜா பட்டர், செல்வம் போன்ற அர்ச்சகர்கள் ஒருங்கிணைந்து சீரோடும் சிறப்புடன் நடத்துவதற்கு உறுதுணையாக உள்ளார்கள்.

அறுபடை வீடுகளில் ஒன்றான பழனியிலே குடமுழுக்கு வெகு சிறப்பாக நடத்தப்பட்டு 98 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்ட வரைவு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 86 கோடி ரூபாய் செலவில் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பெருந்திட்ட பணிகளை தொடங்கி வைத்துள்ளார். அதேபோல் சுவாமிமலையில் படியில் ஏறுவதற்கு பக்தர்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு மின்தூக்கி ஏற்பாடு செய்திருக்கின்றோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட மூத்த குடிமக்கள் 2000 நபர்களை அறுபடை வீடுகளுக்கு கட்டணமில்லாமல் அரசு மானியத்தோடு அழைத்துச் சென்று இருக்கின்றோம். இந்த ஆண்டு மேலும் 2000 மூத்த குடிமக்களை கட்டணம் அழைத்துச் செல்ல உள்ளோம். அறுபடை வீடுகள் மற்றும் அறுபடை வீடுகள் அல்லாத 143 முருகன் திருக்கோயில்களுக்கு 1085 கோடி ரூபாய் 884 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் கடவுள் முருகனுக்கு இந்த திராவிட மாடல் ஆட்சியில் பெருமை சேர்த்தது போல் எந்த ஆட்சியிலும் பெருமை சேர்க்கவில்லை என்பதற்கு முழு உதாரணமாக பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு திகழ்கிறது.

திருப்பரங்குன்றத்திற்கு கம்பிவட ஊர்தி (ரோப் கார்) அமைப்பதற்கான முதல் கட்ட ஆய்வு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்குகு அரசு நிதி ஒதுக்கி இருக்கின்றது. ஆகவே, கூடிய விரைவில் ரோப் கார் அமைப்பதற்கான டெண்டர் கோரப்படும். இன்னார் இனியவர் என்று இல்லாமல் கோரிக்கைகள் எங்கிருந்து வரப் பெற்றாலும் அவற்றை நிறைவேற்றுகின்ற முதல்வராக திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் திகழ்கிறார். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு பழனியிலே தமிழில் குடமுழுக்கு நடத்துவது குறித்த வழக்கு நீதிமன்றத்திற்கு சென்றது. தமிழிலே குடமுழுக்கு நடத்தப்படும் என்று அறிவித்ததோடு, தமிழிலே குடமுழுக்கை நடத்தி காட்டினோம். மருதமலை முருகனுக்கும் இதேபோல் தமிழிலே குடமுழுக்கு நடத்தினோம் இன்னார் சொல்லி தான் நாங்கள் நடத்த வேண்டும் என்பது அல்ல. திரு. பிச்சை குருக்கள், திரு. ராஜா பட்டர், திரு. செல்வம் போன்ற குருக்கள்கள், துறை செயலாளர், ஆணையர் என அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழிலே குடமுழுக்கு நடத்த வேண்டும் என்று முடிவெடுத்து இருக்கின்றோம். தானாக நடைபெறப் போகின்ற ஒன்றை நாங்கள் ஆர்ப்பாட்டம் முற்றுகை என்ற பிறகு தான் நடந்ததாக சிலர் கூறுவது தானாக கனிந்த கனியை எங்களுடைய மந்திர சொற்களால் தான் கனிந்தது என்று கூறுவது போல் இருக்கிறது.

திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்பவர்களுக்கு அர்ச்சனை கட்டணத்தில் 60 சதவீதத்தை அர்ச்சகர்களுக்கே வழங்கியதோடு, 13 போற்றி புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்ட ஆட்சி இந்த ஆட்சியாகும். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் இது தான் திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் நமது முதலமைச்சர் அவர்களின் கொள்கையாகும். ஆகவே திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு தமிழிலும் நடத்தப்படும் என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பழனியில் நடத்திய அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை பொறுத்த அளவில் நாங்கள் எந்த அரசியல் கட்சியையும், அரசியல் சார்புடையவர்களையும் அழைக்கவில்லை. மதச்சார்புடைய எந்த விதமான அடையாளமும் நாங்கள் பயன்படுத்தப்படவில்லை. முழுக்க முழுக்க தமிழ்க் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்பதுதான் அறநிலையத்துறையின் பணியாக மேற்கொண்டோம். மாநாட்டிற்கு வாகனத்தை ஏற்பாடு செய்கிறோம் வா, வா என்றும் எவரையும் அழைக்கவில்லை. நாங்கள் ரசீது புத்தகத்தை அடித்துக் கொண்டு எங்கும் பணத்தை வசூலிக்கவில்லை. எங்களின் செல்வாக்கை பயன்படுத்தி ரயிலில் இலவசமாக கட்டணம் இல்லாமல் அனுப்ப வேண்டும் என்று நாங்கள் உத்தரவும் பிறப்பிக்கவில்லை. பழனி முருகன் மாநாட்டை இரண்டு நாட்கள் நடத்திட வடிவமைத்தோம். அதில் 500க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்றார்கள். 17 நாடுகளிலிருந்து முருக பக்தர்கள் மாநாட்டில் பங்கேற்றார்கள். முருகனுக்காக பிரத்யேகமாக 3டி கண்காட்சி அமைத்து இரண்டு நாட்கள் நடத்திட முடிவெடுத்து, பக்தர்கள் கூட்டம் அலை மோதியதால் பத்து நாட்கள் நடத்தினோம். லட்சோப லட்ச மக்கள் பங்கேற்றார்கள். எங்கும் அரசியல் வாடை இல்லை.

இந்த மாநாட்டில் உயர்நீதி மன்ற நீதியரசர்கள், ஆன்றோர் சான்றோர் பெருமக்கள், அடியார்கள், உண்மையான முருகர் பக்தர்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள். அது அரசின் சார்பில், இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 10 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டு நடத்தப்பட்ட மாநாடாகும். முழுக்க முழுக்க முருகர் பக்தர்கள் நடத்தப்பட்ட மாநாடு. மதுரையில் நடத்தப்படும் மாநாடு அரசியல் நோக்கத்தோடு அரசியலில் லாபம் காண வேண்டும் என்ற நோக்கத்தோடு நடத்தப்படுகின்ற மாநாடு என்பதனை தயவு செய்து ஊடகத்துறையினர் இதைப் பிரித்துப் பார்க்க வேண்டும். அதையும் மாநாடு, இதையும் மாநாடு என்றால் பழனியிலே நடைபெற்ற மாநாட்டிற்கு என்ன பெயர் வைப்பது. ஆகவே எல்லோருக்கும் எல்லாம் என்ற தாரக மந்திரத்தோடு செயல்படுகின்ற எங்களுடைய முதல்வர் அவர்கள், அந்தந்த மதத்தினர் அவர்களுடைய வழிபாட்டிற்கு அமைதியான சூழல் வேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்த வழியில் அமைதியாக அவர்களின் வழிபாடு நடத்த வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருக்கின்றார். மதத்தால், இனத்தால், மொழியால், மக்களை பிளவுபடுத்த ஒரு போதும் இந்த மண்ணிலே திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இடம் தர மாட்டார். முருகர் பக்தர்களும் இதை நன்றாக உணர்ந்துள்ளார்கள் அதன் முடிவு 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் வெளிப்படும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 11 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதான திட்டத்தை கொண்டு வந்தோம். இதற்கு முன் 2 திருக்கோயில்களில்தான் இத்திட்டம் இருந்தது. இப்படி அன்னதான பிரபுவாக திகழ்கின்ற நமது முதல்வர் அவர்கள் பழனி திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவினையும் வழங்கி வருகின்றார். அடுத்தாக அதே பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயின்று வரும் விடுதி மாணவர்களுக்கும் மூன்று வேளை கட்டணமில்லா உணவு வழங்க உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் வைகை செல்வன் அவர்கள், திமுக கப்பலில் ஓட்டை விழுந்து விட்டது என பேசியது குறித்த கேட்டீர்கள். அவர்களுடைய கப்பலில் தான் ஓட்டை விழுந்து தத்தளித்துக் கொண்டிருக்கிறது. மாலுமி இல்லாத கப்பலாக திசை தெரியாத, கலங்கரை விளக்கே தெரியாமல் பயணித்துக் கொண்டிருக்கின்றவர்கள் அவர்கள் தான். உறுதியான எங்கள் கப்பலில் எந்த காலமும் ஓட்டை விழாது, எந்த சூழல் இருந்தாலும் கரைக்கு கொண்டு சேர்க்கின்ற உறுதிமிக்க முதல்வர் அவர்கள் மாலுமியாக இருக்கின்ற வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கப்பல் எந்த புயலிலும், எந்த சூறாவளியிலும் சிக்காது இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

முதலமைச்சரின் உத்தரவுப்படி

# டெல்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்!

புதுடெல்லி, ஜூன்.19-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று (18.06.2025) புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், டெல்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில், சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ஒருமுறை நிதியுதவியாக தலா 8 ஆயிரம் ரூபாய் மற்றும் அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், மசாலாப் பொருட்கள் அடங்கிய 4 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் தொகுப்பினை வழங்கினார்.

புதுதில்லி ஜங்புரா பகுதியில் அமைந்திருந்த மதராசி கேம்ப் என்று அழைக்கப்பட்ட குடிசைப் பகுதியில் வசித்து வந்த 370 தமிழ் குடும்பத்தினர் அங்கிருந்து அகற்றப்பட்டதைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இடம் பெயர்ந்த தமிழ் குடும்பத்தினருக்கு அவர்களது வாழ்வாதாரத்தை பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க உதவியாக இருக்கும் வகையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்பம் ஒன்றிற்கு ரூபாய் 12000 மதிப்பிலான (ரூ.8000 நிதி உதவி மற்றும் ரூ.4000 மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள்) தொகுப்பையும் வழங்க ஆணையிட்டதன் பேரில், நேற்று (18.06.2025) இடம் பெயர்ந்த தமிழ் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கும் பணி துவங்கியது.

பயனாளிகளின் விபரங்களை சரிபார்த்து ஆவணங்களை பெறுவதற்காக 7 கவுண்டர்கள் அமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு அதிக சிரமம் இல்லாமல் ஆவணங்கள் சரி பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. பயனாளிகள் அனைவருக்கும் பிரத்யோக வாகன ஏற்பாடுகள் செய்யப்பட்டு அவரவர் தற்போது தங்கியிருக்கும் இடத்தில் இருந்து அழைத்து வரப்பட்டு திரும்பவும் கொண்டு சென்று விடப்பட்டார்கள். பயனாளிகள் நிவாரண தொகுப்பை பெற்றுக்கொண்டு வீடு திரும்பும் வரை அவர்களுக்கான உணவு மற்றும் இதர வசதிகள் செய்து தரப்படவிருக்கிறது.

அரசு ஆணையின்படி பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ரூபாய் 8000 தொகையை அவர்களது வங்கிக் கணக்கில் மட்டுமே செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருந்த காரணத்தினால் வங்கிக் கணக்கு இல்லாத பயனாளிகளுக்கு உடனடியாக தமிழ்நாடு இல்லத்திலேயே வங்கி முகவர்களை வரவழைத்து ஜன் தான் சேமிப்பு கணக்கினை துவக்கி அந்த வங்கி கணக்குகள் மூலமாக பண பரிமாற்றம் செய்யப்பட்டது. வயதான நோயிற்று வீட்டிலிருந்து வெளிவர இயலாத பயனாளிகள் குறித்த கணக்கெடுப்பு நடந்து வருகிறது அத்தகைய பயனாளிகளுக்கு அவர்களது நிவாரணத் தொகுப்பினை அவர்கள் தங்கி இருக்கும் இடத்திற்கே சென்று வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக அமைச்சர் சா.மு.நாசர் புதுதில்லியில் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-

ஜான்பூர் பகுதிகளில் வசிக்கின்ற 370 குடும்பங்களுக்கு - பரப்புள்ள ஆற்றங்கரையில் நீர்பரப்பினால் ஏற்பட்ட இன்னல்களால் ஏறக்குறைய 370 குடும்பங்களுக்கு இன்றைய தினம் நீதிமன்ற ஆணைப்படி அவர்களுடைய வீடுகள் இடிக்கப்பட்டன. இடிக்கப்பட்டதை அறிந்த முதல்வர் அவர்கள் "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற அடிப்படையில் அவர்களுக்கு நேசக்கரம் நீட்டப்படவேண்டும் என்ற அடிப்படையில், உடனே இங்கு இருக்கின்ற நம்முடைய முன்னாள் அமைச்சர் அண்ணன் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு அவர்களுக்கும், டெல்லி சிறப்புப் பிரதிநிதி அருமை நண்பர் ஏ.கே.எஸ். விஜயன் அவர்களுக்கும் உத்தரவு பிறப்பித்து, உடனே டெல்லி முதல்வரை சந்தித்து அவர்களுக்கு உதவிடுமாறு ஆணை பிறப்பித்தார்கள். அதன் அடிப்படையில், அங்கு டெல்லியில் இருக்கின்ற முதலமைச்சரை சந்தித்தபோது, சரியான ஒரு நேசக்கரம் நீட்டாத காரணத்தால், முதல்வர் அவர்களே அவர்களுக்கு நேசக்கரம் நீட்டவேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில், அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு அவர்கள் இங்கிருந்து தமிழகம் வருவார்களேயானால், அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்ற உத்தரவாதத்தையும், இப்போது அங்கு இருப்பவர்களுக்கு முதல்கட்டமாக உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில் சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ஒருமுறை நிதியுதவியாக தலா 8 ஆயிரம் ரூபாய் மற்றும் அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், மசாலாப் பொருட்கள் அடங்கிய 4 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் தொகுப்பினை வழங்கி, எங்களையும் அனுப்பி, அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார்கள். அதன் அடிப்படையில் நாங்கள் வந்திருக்கிறோம். அந்த நிவாரணப் பொருட்களை எல்லாம் வழங்கியிருக்கின்றோம்.

இவ்வாறு அமைச்சர் சா.மு.நாசர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் அஷிஷ் குமார், ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை, அண்ணா சாலை, தேவநேய பாவணர் நூலக கட்டிடத்தில், நேற்று (18.06.2025) தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவராக டாக்டர் திப்பம்பட்டி வி. ஆறுச்சாமி பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத் துறை ஆணையர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய உப தலைவர் திருமதி கனிமொழி பத்மநாபன், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைமை செயல் அலுவலர் கோவிந்தராஜுலு, (ஓய்வு) மற்றும் உறுப்பினர்கள் உடனிருந்தனர்.